# News Release

# போரின் காலங்களில் தாய்நாட்டிற்காகப் போராடிய துணிச்சலான கனேடியர்களுக்கு மரியாதை!

*நவம்பர் மாத நினைவு நிகழ்ச்சிகளுக்கு உங்களை அன்புடன் அழைக்கிறோம்*

**வாகன், ஒன்ராறியோ (அக். 17, 2025)** – வரும் நவம்பர் மாதம், வாகன் நகரம், போரிலும், சண்டையிலும், அமைதிக்காலத்திலும் தங்கள் உயிரைப் பணயம் வைத்து – பல சந்தர்ப்பங்களில் உயிர் இழந்த – துணிச்சலான கனடியர்களை நினைவுகூரும் வகையில் நினைவுகூரும் வகையில் இரண்டு சிறப்பு நினைவு நிகழ்ச்சிகளை நடத்துகிறது.

மேயர் ஸ்டீவன் டெல் டுகா மற்றும் கவுன்சில் உறுப்பினர்களுடன் சேர்ந்து, நமது நாட்டிற்குச் சேவை செய்த மற்றும் தொடர்ந்து சேவை செய்து வருகிற துணிச்சலான கனேடியர்களுக்கு மரியாதை செலுத்தும் வாகன் நகரின் நினைவு தின நிகழ்வில் கலந்துகொள்ளுங்கள். இந்த நினைவு தின நிகழ்வு நவம்பர் 11, செவ்வாய்க்கிழமை காலை 10:30 மணிக்கு வுட்பிரிட்ஜ் கல்லறையில் (80 வாலஸ் தெரு) நடைபெறும். விழாவிற்குப் பிறகு, நினைவுக் குளம் மற்றும் அரங்கில் (5020 நெடுஞ்சாலை 7) சிற்றுண்டிகள் வழங்கப்படும். மேலும் தகவல்களுக்கு vaughan.ca/**events** இணையதளத்தைப் பாருங்கள்.

அத்துடன், நவம்பர் 3, திங்கட்கிழமை காலை 10 மணிக்கு வாகன் நகர மண்டபத்தில் (2141 மேஜர் மெக்கன்சி டிரைவ்) நடைபெறும் நகரின் நினைவு மாத விழாவில் கலந்துகொள்ளவும் அழைக்கப்படுகிறீர்கள்.

நிகழ்ச்சி முடிந்ததும், வாகன் நகரின் பாப்பிச் சுவர் ஓவியத்தில் (Poppy Mural) உங்கள் நினைவுகள், அமைதி மற்றும் நம்பிக்கையைப் பகிர்வதற்கும், இரண்டாம் உலகப்போரின்போது வாகன் மற்றும் யார்க் பிராந்தியத்தைச் சேர்ந்தோர் அனுபவித்த போர் காலச் சேவைகளை நினைவுகூரும் வரலாற்று கண்காட்சியையும் பார்வையிடுவதற்கும் உங்களை அன்புடன் வரவேற்கிறோம்.

இந்த ஆண்டின் கண்காட்சியில் ஜான் தாம்சன், பேட் மெக்டொனால்ட் மற்றும் ரூபி கிளாசி ஆகியோரின் வாழ்க்கை மற்றும் பங்களிப்புகள் இடம்பெற்றுள்ளன. போரின் போது பயன்படுத்தப்பட்ட கலைப்பொருள் மற்றும்

அரிய புகைப்படங்களின் வழியாக, இவர்கள் மற்றும் வாகன் நகர மக்களுக்கிடையிலான பன்முகத் தொடர்பை வெளிப்படுத்தும் வகையில் இந்தக் கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இந்தக் கண்காட்சியை நவம்பர் 14, வெள்ளிக்கிழமை வரை நகர மண்டபத்தில் நேரில் காணலாம்; மேலும், ஒரு ஆண்டுக்கு vaughan.ca/**RemembranceMonth** இணையதளத்தில் ஆன்லைனில் காணலாம்.

**மேற்கோள்**

“நினைவு மாதத்தில், நமது நெஞ்சில் பாப்பி மலரை அணிவது, கனேடிய போர்வீரர்களின் தியாகத்திற்கும் துணிச்சலிற்கும் நமது ஆழ்ந்த மற்றும் நிலையான நன்றியின் அடையாளமாகும். கனடாவுக்காகப் போரிலும், சண்டைகளிலும், அவசரநிலைகளிலும், அமைதிக்காலத்திலும் தங்கள் உயிரை பணயம் வைத்த துணிச்சலான ஆண்கள் மற்றும் பெண்களை நினைவுகூரும் வாகன் நகரின் நினைவு நிகழ்ச்சிகளில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். அவர்களின் தியாகமும், நினைவும் என்றென்றும் வாழட்டும். அவர்களை நாம் எப்போதும் மறக்க மாட்டோம்.”

- மேயர் ஸ்டீவன் டெல் டுகா

**முக்கியத் தகவல்கள்**

- வாகன் நகரம் நவம்பர் மாதத்தை நிரந்தரமாக ‘நினைவு மாதம்’ என அறிவித்துள்ளது.
- இந்த ஆண்டு, நினைவு மாதத்தை நினைவுகூரும் வகையில் நகரம் இரண்டு சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துகிறது: நவம்பர் 11, திங்கட்கிழமை காலை 10:30 மணிக்கு வுட்பிரிட்ஜ் கல்லறையில் நடைபெறும் நினைவு சேவை, மேலும் நவம்பர் 3, திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நகர மண்டபத்தில் நடைபெறும் விழா.
- இரண்டாம் உலகப்போரில் வாகன் மற்றும் யார்க் பிராந்தியத்தைச் சேர்ந்தோர் அனுபவித்த போர் காலச் சேவைகளை நினைவுகூரும் வாகன் நகரத்தின் பாப்பிச் சுவர் ஓவியம் மற்றும் வரலாற்றுக் கண்காட்சி, நவம்பர் 14, வெள்ளிக்கிழமை வரை நகர மண்டபத்தில் காட்சிக்காக வைக்கப்படும் மற்றும் ஒரு வருடத்திற்கு vaughan.ca/**RemembranceMonth** இணையதளத்திலும் காணக்கிடைக்கும். நேரடிக் கண்காட்சியில் இல்லாத கூடுதல் புகைப்படங்களும் தகவல்களும் இணையக் கண்காட்சியில் உள்ளன.

**மேலும் அறிய**

- நினைவு மாத வலைப்பக்கம்

-30-

**COMMUNICATIONS, MARKETING AND ENGAGEMENT DEPARTMENT**
2141 Major Mackenzie Dr., Vaughan, ON L6A 1T1 | 905-832-2281 | vaughan.ca

# News Release

**வாகனைப் பற்றி:** வாகன் நகரம் கனடாவின் மிகவும் வேகமாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றாகும், இதன் மக்கள் தொகை 344,412 ஆக உள்ளது. 1991-இல் இணைக்கப்பட்ட வாகன், கான்கார்ட், க்ளீன்பர்க், மேப்பிள், தோர்ன்ஹில் மற்றும் வுட்பிரிட்ஜ் சமூகங்களை உள்ளடக்கியது. இந்தக் கலாச்சார ரீதியாகப் பன்முகத்தன்மை கொண்ட நகராட்சி, யார்க் பிராந்தியம் மற்றும் கிரேட்டர் டொராண்டோ பகுதியின் மையத்தில் அமைந்துள்ளது.

**ஊடக தொடர்புக்கு:** வாகன் நகரம்
தொடர்புகள், சந்தைப்படுத்தல் மற்றும் ஈடுபாட்டுத் துறை
905-832-2281 | corpcomm@vaughan.ca